செ.வெ.எண் :01/டிசம்பர் நாள் : 01.12.2018

# இராமநாதபுரம் மாவட்டத்தில் 24,151 மாணாக்கர்களுக்கு ரூ.8.97 கோடி மதிப்பிலான தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம். பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பள்ளிகளில் இன்று (01.12.2018) பள்ளிக்கல்வித்துறையின் சார்பாக நடைபெற்ற அரசு விழாக்களில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாண்புமிகு தகவல் தொழில்நுட்வியல் துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், 18 பள்ளிகளைச் சார்ந்த 5,555 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2,06,54,497/- மதிப்பிலான மிதிவண்டிகளை வழங்கினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்தார்.

குறிப்பாக, பார்த்திபனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 4 பள்ளிகளைச் சார்ந்த 1,190 மாணாக்கர்களுக்கு ரூ.44,26,751/- மதிப்பிலும், பரமக்குடி சௌராஷ்டிரா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 8 பள்ளிகளைச் சார்ந்த 3,629 மாணாக்கர்களுக்கு ரூ.1,34,89,921/-மதிப்பிலும், நயினார்கோயில் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் 6 பள்ளிகளைச் சார்ந்த 6 பள்ளிகளைச் சார்ந்த 736 மாணாக்கர்களுக்கு ரூ.27,37,825/- மதிப்பிலும் என மொத்தம் 18 பள்ளிகளைச் சார்ந்த 5,555 மாணாக்கர்களுக்கு ரூ.2,06,54,497/- மதிப்பிலான தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இதில் 2017-2018 ஆம் கல்வியாண்டில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணாக்கர்கள், 2018-2019 ஆம் கல்வியாண்டில் தற்போது 11ஆம் வகுப்பு பயின்று வரும் 2,697 மாணவர்கள், 2,858 மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக மாணவ, மாணவியர்களின் நலனுக்காக விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா மடிக்கணினிகள், விலையில்லா சீருடை, கல்வி இடைநிற்றலைத் தவிர்த்திடும் விதமாக உதவித்தொகை என 14 விதமான மாணவர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 2017-2018ஆம் கல்வியாண்டில் 11-ஆம் வகுப்பு படித்த மாணவர்கள், 2018-2019ஆம் கலவியாண்டில் தற்போது 11ஆம் வகுப்பு படித்து வரும் மாணவர்கள் என மொத்தம் 24,151 மாணாக்கர்களுக்கு ரூ.8.97 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளது. இவற்றில் முதற்கட்டமாக இன்றைய தினம் நடைபெற்ற விழாவில் பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட 18 அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளைச் சார்ந்த 5,555 மாணாக்கர்களுக்கு ரூ.2.07 கோடி மதிப்பிலான தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இதில் 2,697 மாணவர்கள், 2,858 மாணவியர்களும் அடங்குவர்.

மேலும் நடப்பு கல்வியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் விலையில்லா மடிக்கணினிகள் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணிகள் நடைபெற்றுள்ளது. விரைவில் தமிழகம் முழுவதும் மொத்தம் 15 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இதுதவிர, தமிழகத்தில் உள்ள 12,524 ஊராட்சிகளை ஆப்டிகல் பைபர் கேபிள் (Optical Fibre Cable) மூலம் இணைய வழியில் ஒருங்கிணைத்திடும் விதமாக திட்டம் செயல்படுத்துவதற்கு மத்திய அரசினால் நிதி கோரப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் பட்சத்தில், தமிழ்நாடு அரசு மக்கள் நலனுக்காக செயல்படுத்தி வரும் அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும் பொதுமக்கள் சிரமமின்றி இணைய வழியில் பெற்று பயனடைய வாய்ப்பாக அமையும்.

அதேபோல இராமநாதபுரம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் தண்ணீர் தேவைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு இராமநாதபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் நிரப்பப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அரசு சட்டக்கல்லூரி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் நன்மைக்காக புதிய அரசு மருத்துவக்கல்லூரி துவங்கிடுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வவைக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசினார்.

இந்த விழாவில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.இரா.முருகன், மாவட்ட கல்வி அலுவலர்கள் (இராமநாதபுரம்) திரு.டி.பிரேம், (பரமக்குடி) (பொ) திரு.இராமர் உள்பட அரசு அலுவலர்கள், பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**